சர்வதேச தொற்றுநோய் பரவல்

# புதியதோர் சமூகம் படைப்போம்

முனைவர் **பா. கீதா**
உதவி பேராசிரியர், சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.



வெளியீடு:

**தமிழ்நாடு உளவியல் சங்கம்**

தொடர்புக்கு: 94884 94881

இணையதள முகவரி: www.tnpsya.org

Designed by : sriponniprinters@gmail.com

## சர்வதேச தொற்று நோய் பரவல்

# புதியதோர் சமூகம் படைப்போம்

**முன்னுரை**



கடந்த எழுபது நாட்களாக நாம் வாழும் வாழ்க்கை மூன்று மாதத்திற்கு முந்தைய சமூக அமைப்பினையுடையதாக இல்லை. ஏனென்பது நாம் அறிந்த ஒன்றே, உலகினை உலுக்கிவரும் கோவிட் 19 நோய்த்தொற்றினால். நம் தினசரி நிகழ்வுகள் அனைத்தும் மாற்றம் கண்டுள்ளது. பொதுமுடக்கம் - மார்ச் 17, 2020 முதல் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களும் விடுமுறை விடப்பட்டது, பின்னர் அதனை தொடர்ந்து மார்ச் 24, 2020 ஆம் தேதி நள்ளிரவிலிருந்து ஒட்டுமொத்த இந்தியாவே பொதுமுடக்கத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. அன்று முதல் இன்று வரை இந்நிலை தொடர்கிறது சில தளர்வுகளுடன். சமூக அமைப்புகளில் இதனால் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் தளர்விற்கு பின் நாம் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் குறித்த ஒரு சமூகவியல் பார்வை.

இன்றைய நிலையானது முன் சம்பவிக்காததாகவும், தாக்கம் அதிகமானதாகவும் உள்ளது. அதற்கான காரணங்களில் சில, நவீனமயமாதல், உலகமயமாதல், தகவல் தொழில்நுட்பவளர்ச்சி போன்றவை ஆகும். இடம் பெயர்வு முன்னைவிட தற்போது மிகவும் எளிதாகவும், வேகமாகவும், அனைவருக்குமானதாகவும் மாறிவருகிறது. இதனால் இத்தொற்றினை விரைவாக நாடு விட்டு நாடும், கண்டம் விட்டு கண்டமும் இறக்குமதி செய்ய ஏதுவாகிவிட்டது.

பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட அன்றிலிருந்து அமைதியான சாலைகள், ஆட்கள் இல்லாத பொது இடங்கள், தடைச்செய்யப்பட்ட சமூகத்தொடர்புகள், பொதுக்கூட்டங்கள், மற்றும் சமய வழிபாடுகள் இல்லாத வழிபாட்டுத் தலங்கள் என்றாகிவிட்டது. வாழ்க்கை, வீடு என்ற நான்கு சுவற்றுக்குள் மாறிப்போனது. அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே வெளியில் சென்று ஒருவித பயத்தினுடனே வாழ ஆரம்பித்தோம். அனைத்து சுழலிலும் ஒரு நிச்சயமற்ற தன்மை, என்று இந்நிலை சரியாகும் என்ற கேள்வியே தொடர்ந்து வருகிறது.

இந்த நோய் புதிய இயக்கவியலை அறிமுகப்படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாது சமூக ஏற்றத்தாழ்வினை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. ஆம், இந்த மாற்றம் புதிய மெய்மைகளை வெவ்வேறு பிரிவினருக்கும், வெவ்வேறு மாதிரியானதாக ஆக்கியுள்ளது.

இக்காலகட்டத்தில் வாழ்க்கை வாய்ப்புகள் வயது, இனம், பாலினம், வர்க்கம் போன்றவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது, வேறுபடுகிறது.

இயக்கவியல் மற்றும் சமூகமாற்றத்தினை முக்கியப்படிப்பு பொருளாகக்கொண்ட சமூகவியல், சமூக நிறுவனங்களின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளைக் கற்பதாகும், சமூகத்தின் குறிப்பிடத்தக்க நிறுவனங்களான குடும்பம், கல்வி, சமயம், பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் இச்சூழலில் பெருவாரியான மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. மாற்றம் மட்டுமே நிதர்சனம் என்ற நிலையில் குறிப்பாக குடும்பம், கல்வி மற்றும் சமய நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய ஒரு பகுப்பாய்வு கட்டுரை.

## குடும்பம்



குடும்பம் மிக அடிப்படையான சமூகக் குழு, அதில் அனைவரும் ஏதாவது ஒரு விதத்தில் தொடர்பிலிருப்போம். இந்த சர்வதேச தொற்றுப்பரவல் காலத்தில் வீட்டினுள்ளேயே இருக்கும் நிலை, இன்பம் மற்றும் அழுத்தம் என்ற இருவேறுபட்ட சூழலினை ஏற்படுத்தியுள்ளது. உறவுகளுடனான பிணைப்பு பலப்பட்டுள்ளது. வேலை மற்றும் கல்வி என்று தினமும் எட்டிலிருந்து பத்து மணிநேரம் வெளியிலிருந்த நிலைமாறி 24 X 7 வீட்டில் குடும்பத்துடனேயே இருப்பது மோதல்களுக்கும் வழிவகுத்தது. இதில் பல்வேறு வயதினரும், பாலினத்தினரும் வெவ்வேறு விதமாய் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- ❒ ஊரே அடங்கிய நிலையிலும் மாற்றமே இல்லாமல் நிகழக்கூடியவற்றில் பசியும் ஒன்று. பசியினை போக்க வீட்டில் சமையலறை செயல்பட்டேயாகவேண்டும். ஆக குடும்பத்தில் பெண்களுக்கு இந்த பொதுமுடக்கக் காலத்திலும் மாற்றம் கிடையாது. சொல்லப்போனால் வேலைப்பளு அதிகரித்ததே அன்றி குறையவில்லை.

- ❒ குடும்பத்தில் ஆண்கள், பரபரப்பாய் பம்பரம் போல் சுற்றிதிரிந்தவர்களின் கால்கள் கட்டப்பட்டன. பல குடும்பங்களில் ஆண்கள் பெண்களுடன் வீட்டு வேலைகளை பகிர்ந்தும் பழகியும் கொண்டனர். அதையும் தாண்டி ஆணாதிக்க போக்கு தலைத்தூக்கும் பொழுது குடும்ப வன்முறைகளும் வெடித்தன.

- ❒ ஐக்கிய நாடுகள், பெண்களுக்கெதிரான இவ்வன்கொடுமையினை ‘நிழல் தொற்றாக’ கருதுகிறது. ஏனென்றால் இக்காலக்கட்டத்தில் குடும்பங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை தவிர்க்க முடியாததாகிறது.

- ❒ பள்ளிப் பருவத்தினர் இந்த நோய்த்தொற்று காலத்தை பயத்துடனும், ஒருவித கலக்கத்துடனுமே எதிர்கொண்டுவருகின்றனர். விடுமுறையில் இருந்தும் அதனை அனுபவிக்கவிடாமல் கட்டுப்படுத்தியே வைத்துள்ளது பொதுமுடக்கம். இக்குழந்தைகளை கவனித்துக்கொள்வதே குடும்ப அங்கத்தினருக்கு ஒரு கடினமான பணியாகிறது. இதில் பொதுவாக பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே, இந்த இளங்குருத்துக்களின் ஆற்றலினை நெறிப்படுத்தவும், அவர்களுக்கு விதவிதமாய் சமைத்து ஆரோக்கியமாக வைத்திருப்பதும் அவசியமாகிறது.

- ❒ இந்த சூழலில் பாரம்பரிய விளையாட்டுக்களான தாயம், பல்லாங்குழி, பாண்டி போன்றவற்றில் ஆர்வம் காட்டும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

- ❒ இதற்கும் அப்பாற்பட்ட இந்த சிறார்களுக்கு பொழுதினை வீட்டின் உள்ளேயே போக்குவது மிகவும் சிரமமாக உள்ளது. அவர்களின் வாழ்வில் கைபேசி, கணினி, இணையதளம், சமூக ஊடகங்கள் என்பன அங்கமாகிவிட்டது. அதன் விளையாட்டுத் தளங்கள் அவர்களின் புது பொழுதுபோக்காக மாறிவிட்டது. இதன் விளைவாக இனிவரும் காலங்களில், இதன் மேலுள்ள மோகத்தினை போக்க அவர்கள் குடும்பம், பள்ளியின் துணைகொண்டே முயற்சிக்கவேண்டும்.

- ❒ நோய் தொற்றுக்காலத்தில் என்ன செய்வது, என்ன செய்கிறோம் என்று தெரியாமல் திணறிய இன்னுமோர் பகுதியினர் - இளைஞர்கள். வேகம் உத்வேகம் என முழுசக்தி பிழம்பாக இருக்கும் அவர்களும் வீட்டினுள்ளே அடைந்து நாட்களை கடத்தினர். சில இளைஞர்கள் அரசின் வழிகாட்டுதலை கடைப்பிடிக்காமல் தங்கள் உல்லாசமும், உற்சாகமும் முதன்மை என்று கருதினர். அவர்கள் காவல்துறையின் தண்டனை மற்றும் எச்சரிக்கையினைப் பெற்றனர்.

- ❒ இவர்களின் கையில் கைபேசி ஆறாம் விரல் போல் ஆனது. இவர்கள் பகிர்ந்துகொள்ளும் மீம்ஸ் என்னும் சமூக ஊடக தகவல் பரிமாற்றம் அவர்களில் பலரை உயிர்ப்போடு வைத்துள்ளது. பல இளம்பெண்கள் சமூக ஊடகத்தில் உடை, உணவு குறித்த சவால்களை ஏற்று படங்களை வெளியிட்டு நேரத்தை செலவு செய்தனர்.

- ❒ குடும்பத்துள் ஒரு பகுதியாக மாறியுள்ளது தகவல். தகவல் தரும் ஊடகங்களாய் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் - வாட்ஸப், யூடியுப், பேஸ்புக் போன்றவைகளை - நம்மில் பலரின் சிந்தனைகளில் ஊடுருவி தகவல் தருவதைத் தாண்டிக் கலக்கத்தினையே ஏற்படுத்திவருகிறது.

- ❒ இன்றைய காலக்கட்டத்தில், குறிப்பாக இந்த நோய்தொற்றுக்காலத்தில், உருவாகிவரும் மற்றுமோர் சமூகப்பிரச்சனை இன்போடமிக் (INFODEMIC) எனப்படும் தகவல்

தொற்றுப்பரவல் ஆகும். தகவலின் வேகம், வீரியம், உண்மைத்தன்மை அனைத்தும் அதனை அறிபவரை தாக்கி அவர்களின் எண்ணவோட்டத்தினை பாதிக்கிறது.

- ❒ இத்தொற்றுப்பரவலிலிருந்து மக்கள் தங்களை காத்துக் கொள்ள தகவலின் உண்மைத்தன்மையினையும், தகவலை வெளியிட்டோரின் நம்பகத்தன்மையினையும் கருத்தில் கொண்டே ஏற்கவேண்டும்.

- ❒ இந்த நிலையானது நம்மை பொருள்சார்ந்த, குறிப்பாக டிஜிட்டல் தகவல் மற்றும் டிஜிட்டல் சாதன விசயங்களில் அதிகம் தொடர்புடையவர்களாய் ஆக்கிவருகிறது.

குடும்பங்களில் கட்டாயப்படுத்தப்பட்ட அருகாமை, இயக்கங்கள் தடைச்செய்யப் பட்டதால் சமூகத்தில் நம் பாத்திரங்களின் ஒரே மாதிரியானத் தன்மையால் (homogeneity in the roles played) சலிப்பையும், உறவு முறைகளில் அமைதியின்மை மற்றும் நிலையற்றத்தன்மையினையும் ஏற்படுத்தியுள்ளது.

## குடும்பமும் உறவுகளும்



உறவுமுறைகள் அதன் தன்மை, மற்றும் இயல்பு ஆகியவை சமூகத்தின் இயக்கத்தினை அறிய உதவும். இந்திய சமூகம் குடும்பம், உறவு மற்றும் அதன் பாரம்பரியம் ஆகியவற்றால் பிணைக்கப்பட்டுள்ளது. அவையும் இந்த நோய்த்தொற்றால் மாற்றம் அடையவுள்ளதா என்ற கேள்வி எழும்பியுள்ளது.

- ❒ முதன்மை உறவுகளான பெற்றோர், கணவன் அல்லது மனைவி, மற்றும் குழந்தைகள் ஆகிய உறவுகளுடனான நெருக்கமே இன்றைய சூழலில் காணமுடிகிறது.

- ❒ கூட்டுக்குடும்பங்களில் தலைமுறைகளைத் தாண்டி உறவுகள் அன்புடன் பலப்பட்டும் உள்ளது.

- ❒ இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை சொந்தங்கள் இந்த சமூக இடைவெளிக்காலத்தில் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாக மட்டுமே தொடர்கிறது. இதிலும் அடித்தட்டில் உள்ள மக்களுக்கு இந்த வாய்ப்பும் குறையாகவே உள்ளது.

- ❒ தொலைபேசி வழி நலவிசாரிப்புகளால் உறவும் நட்பும் வளர்க்கப்பட்டு வருகிறது. அன்பு மற்றும் பாசமான உரையாடல்கள் அக்கறையான நேசத்தை வெளிப்படுத்தியுள்ளது.

- ❒ சில குடும்பங்களில், சில நபர்கள் வெளிமாவட்டங்களில் அல்லது வெளிமாநிலங்களில் பொதுமுடக்கத்தால் தங்கள் ஊர்களுக்கு வர இயலாமல்

மாட்டிக்கொண்டனர். பல குடும்பங்கள் கூட இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் பலர் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள். இவர்கள் தங்கள் குடும்பதினை வந்து சேர்வதே கடினமான மற்றும் சவாலானப் பணியாக உள்ளது. ஆனால் குடும்பமும், உறவுகளும் அவர்களை தாய்மண்ணை நோக்கி ஈர்க்கும் சக்தியாய் உள்ளது.

❒ உறவுமுறைகளை தக்க வைக்க மற்றும் அதன் நெருக்கத்தினை அதிகரிக்க விழாக்களும் பண்டிகைகளும் கொண்டாடப்படும். தற்சமயம் உள்ள சூழலில் சில மாதங்களுக்கோ அல்லது ஆண்டிற்கோ நாம் கூட்டங்களை தவிர்ப்பதினை அரசும், நலவாழ்வு அமைப்புகளும் அறிவுறுத்துகின்றன.

❒ இந்நிலையில் குடும்பங்களில் உறவுகளுடனான தொடர்பு வேறு பரிணாமத்தை நோக்கிச் செல்கிறது. மக்கள் குடும்ப விழாக்களை பெருவாரியாக தவிர்க்கின்றனர். அவ்வாறு நடக்கும் விழாக்களில் பொதுஇடங்களில் ஒருவித அச்சத்துடனும், பீதியுடனும் உலாவுகின்றனர்.

❒ எது சரியான வழிமுறை, எதனை நாம் பின்பற்ற வேண்டும் என்பதில் உள்ள ஐயமே இந்த அச்சத்திற்கு காரணமாயுள்ளது. நோய்த் தாக்கத்தின் தீவிரம் தெளிவாக இல்லாததால் இந்த ஐயம் பலரால் பலவாறாகப் பார்க்கப்படுகிறது.

❒ நான்காம் கட்ட ஊரடங்கில் ஏற்பட்ட தளர்வுகளில் சில குடும்ப விழாக்கள் நடத்தப்பட்டாலும் முககவசம், சமூக இடைவெளி என்ற அரசு கூறியவற்றை கருத்தில் கொண்டாலும் அதனை நடைமுறைப்படுத்த திணறுகின்றனர்.

பொதுவாக குடும்பம் புதிய முறையினை சுவிகரிக்கத் துவங்கிவிட்டது. ஏனெனில் புதிய நடைமுறை, புதிய உண்மைகள், புதிய விதிமுறைகள், மற்றும் நெறிமுறைகளை உள்வாங்கிக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அவ்வாறு உள்வாங்கி கொள்ளும் புதிய நெறிமுறைகள் காலப்போக்கில் புதிய நிறுவனங்களாய் மாறும். அம்மாற்றத்தினை ஏற்க அனைத்து சமூக நிறுவனங்களும் தயாராக வேண்டும். குடும்பம், சமயம் ஆகிய நிறுவனங்கள் மிகவும் அடிப்படையானவை, சமூகத்தின் பரிணாமவளர்ச்சியினை காணும்பொழுது குடும்பத்தினை அடுத்து சிறப்பான பங்களிப்பு செய்த அமைப்பு சமயமாகும்.

## சமயம் / மதம்



சமூகவியல், சமயங்களை முக்கியமான முறைசாரா சமூகக்கட்டுப்பாடாகக் கருதுகிறது. இதனை நம்பிக்கை சார்ந்த, மனிதனை நெறிப்படுத்த உதவும் நுட்பமாக கூட பார்க்கலாம்.

சமயங்களில் நம்பிக்கையே அடிப்படையான விசயம் என்கிறார் சமூகவியலார் துர்க்கெம்.

- ❒ இன்று சமயம் எல்லாவிதத்திலும் பின்னிருக்கையினை எடுத்துள்ளது.
- ❒ பெரிய அளவில் கொண்டாடப்படும் பண்டிகைகள், திருவிழாக்கள் மக்கள் கூடுவதை தவிர்ப்பதற்காக நடத்தப்படவில்லை ஆனால் சிறிய அளவில் வழக்கம் மாறாமலிருப்பத்தற்காக கொண்டாடப்படுகிறது.
- ❒ இந்த கொண்டாட்ட நிகழ்வில் மாற்றம் கண்டாலும் மக்கள் இந்த நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியிலும், யூடியுபிலும் கண்டுகளித்தனர்.
- ❒ பல வழிபாடுகள் நிகழ்நிலையில் (ONLINE) தொடர்ந்து நடந்துகொண்டேதான் உள்ளது. மனிதனின் சமயம் சார்ந்த எண்ணங்களும், சிந்தனைகளும் வேறு தளத்தினை நோக்கி பயணப்படுகிறது.
- ❒ பல்வேறு பிரிவு மக்கள் பலவாறாக இதனை அவதானிக்கின்றனர். கடவுளின் மேல் பாரத்தினை போட்டு நடக்கும் நிகழ்வுகளை கடக்க முயல்கின்றனர். சிலர் வழிபாடு, நம்பிக்கை போன்றவற்றை கேள்விக்கு உட்படுத்துகின்றனர்.
- ❒ குறைந்த எண்ணிக்கையுடனான திருமணங்கள், இறுதிச் சடங்குகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.
- ❒ இதனால் வீண் ஆடம்பரங்கள் தவிர்க்கப்பட்டு தேவைக்கு மட்டுமாக செலவுகள் செய்யப்படுவதாக கருதுபவரும் உண்டு.
- ❒ சமய சடங்கு, சம்பிரதாயங்களை சரியாக செய்ய இயலவில்லை என்போரும் இருக்கின்றனர்.

சமயங்கள் வாழ்வில் ஒன்றாக கலந்த நிலையில் அவரவர் இடத்தில் இருந்தே கூட்டு வழிபாடு, சமய சடங்குகள் ஆகியவை நடைமுறைக்கு வர ஆரம்பித்துவிட்டது. இதன் மூலம் நம்பிக்கை மற்றும் வழிபாட்டின் புதிய பதிப்புகளின் தோற்றத்தினையோ அல்லது மாற்றத்தினையோ எதிர்ப்பார்க்கலாம். பெருவாரியாக மாற்றம் காணத்துவங்கி உள்ள மற்றொரு அமைப்பு கல்வி.

**கல்வி**



இந்த ஊரடங்கில் முதலில் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதும் கல்வியே, கடைசியாக தளர்வு எடுக்கப்படப்போகும் அமைப்பும் கல்வியே. ஆனால் இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளில் மாற்றம்

ஏற்பட்டுள்ளதே அன்றி செயல்கள் நிற்கவில்லை. பெரும்பாலான பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தனது கல்வி சேவையினை நிகழ்நிலையில் (ONLINE) வழங்கத் தொடங்கிவிட்டது.

- ❒ கல்வியின் புதிய நியமங்களாக நிகழ்நிலை (ONLINE) வகுப்புகள் வந்தாலும் அது ஏற்படுத்தியுள்ள தாக்கம் பல்வேறு பரிமாணங்களை கொண்டது.

- ❒ விளிம்பு நிலையில் உள்ள மாணவர்கள், வறுமை கோட்டிற்கு கீழுள்ளவர்கள் மற்றும் கிராமப்புற மாணவர்கள் போன்றோர் இதனை அணுகவோ பயன்படுத்தவோ இயலாத நிலையில் இதற்கு ஒரு மாற்றினை யோசிக்க வேண்டும்.

- ❒ அவ்வாறு பயன்படுத்தும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணிகள் பல சமயங்களில் சுமையாக கூட உள்ளது. மழலையர் பள்ளியில் கூட வீட்டுப்பாடங்கள் அதிகமாக வழங்கப்படுகிறது.

- ❒ மாணவர்களின் மனநலத்தினை மேன்படுத்துவதற்கான பாடத்திட்டத்தினையே வடிவமைக்கவேண்டும். இந்த இரண்டுமாதத்திற்கும் மேலான காலக்கட்டம் அவர்களை தினசரி நடைமுறை கல்விச்செயல்பாட்டிலிருந்து விலகவும் மற்றும் மறக்கவும் செய்துவிட்டது. அதனை செம்மைப்படுத்திக் கொண்டேதான் மற்ற கற்றலினை போதிக்க வேண்டும்.

- ❒ கற்றல் சுகமாகவும் எளிமையாகவும் இருக்கவேண்டும் சுமையாகவும், கடினமானதாக இருக்கக் கூடாது.

- ❒ நிகழ்நிலை வகுப்புகளால் பள்ளி மற்றும் கல்லூரியிலுள்ள போது மாணவர்களுக்கிடையேயான அருகாமை, நட்புறவு, மற்றும் தொடர்பும் கூட எட்டிப்போக துவங்கியுள்ளது.

- ❒ மற்றொரு சிக்கல் இணையதளத் தொடர்பு. இதில் இரண்டு வகையான பிரச்சனைகள் பார்க்கலாம். ஒன்று தொலைதூரத்தில் உள்ளதால் இணைப்பு கிடைப்பதில் சிக்கல். அடுத்தது இணைப்பு கிடைத்தாலும் அது இணைய தொடர்பின் தினப்படி தகவல் நுகர்விற்கு அதிகமாக சென்றுவிடுவது.

- ❒ மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களும் இந்த இணைய வழி வகுப்புக்கள் மூலம் கற்று வருகிறார்கள். இதுவரை பெரும்பாலும் கரும்பலகை, மற்றும் வகுப்பறை கல்வியென இருந்த அவர்களின் கற்பிக்கும் முறை தொழில்நுட்பம் துணையோடு மெய்நிகர் வகுப்புகளுக்கு (virtual classes) பழக்கப்படுத்துகிறது.

- ❐ இம்மாதிரியான மாற்றத்தினை கையாள ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளித்து தயார் செய்ய வேண்டும். அதற்கான சரியான வழிமுறைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

- ❐ கல்வி நிறுவனங்களுக்கான மிகப்பெரிய சவால் அதன் உள்கட்டமைப்பில் ஏற்படுத்தவேண்டிய மாற்றம். இதுவரை இருந்த வகுப்புகளில் நோய்த்தொற்றுப் பரவாத வகையில் இடைவெளி கடைபிடிக்கத் தேவையான இடம், இருக்கை, போன்றவை உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

- ❐ அத்தோடு மட்டுமல்லாது ஷிப்ட் முறையில் பள்ளி, மற்றும் கல்லூரிகளை நடத்த முயன்றால் அதிலும் பல நடைமுறை சிக்கல்களே உள்ளது. அதனை களைய அரசு மற்றும் கல்வி அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றனர்.

**முடிவுரை**

இம்மாதிரியான தருணங்கள் அனைவருக்கும் புதிது, இது நம் முன் வைத்துள்ள சவால்களும் புதிது. இந்த புதிய நடைமுறையினை முதலில் ஏற்றுக்கொள்ள பழகவேண்டும் ஏனெனில் இந்த நோய்த்தொற்று விலகும்வரை இயக்கங்களை முழுமையாக நிறுத்திவைக்க இயலாது, ஆக நாம் நம் முன் உள்ள நிதர்சனமான உண்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். சமூக உறவுகளை மீண்டும் புதுப்பித்து அதன் மூலம் கூடுதலான ஒற்றுமையோடு நம்பிக்கையான புதிய சமூகத்தினை ஏற்படுத்த வேண்டும். சமூக அக்கறையுடைய ஒவ்வொருத் தனிநபரின் செயல்களால் நோயின் தாக்கத்தினை கடந்து செல்லலாம். சுயபுதுப்பித்தலும் சிறந்த தீர்வுகளை தரவல்லது.

நம்மிடமுள்ள கூட்டு உணர்வால் நாம் புதியதோர் சமூக நிலைக்கு தயாராகலாம். தெளிவான மற்றும் மெய்யான தகவல் பரிமாற்றத்தை அதிகரித்து குழப்பங்களை நீக்கலாம். அவரவருக்கான தனிப்பட்ட (customized) தீர்வுகளை கண்டறியலாம். வயது, பாலினம், வர்க்கம், சமூகம் என்று அந்தந்த வகைக்கான தீர்வுகளை காணும் போது சமூகத்தில் உள்ள வேற்றுமையினை நீக்க அனைவரும் பயனடைய உதவலாம். அனைவரின் ஆதரவான செயல்பாடு நாளைய சமூகத்தினை புனரமைக்க வழிவகுக்கும்.

